இல்லையென்றாலும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே எடுத்துச் சொல்லி மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக அந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி மல்லிகா சின்னசாமி.

திருமதி மல்லிகா சின்னசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 27, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

27—

தனிநபர் வருமானம்

*** 18438—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனிநபர் வருமானம் ஓராண்டுக்கு எத்தனை சதவிகிதம்?

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள மக்கள் தொகையில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் எத்தனை பேர் உள்ளனர்?

(இ) ஆம் எனில், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களின் வருமானத்தைப் பெருக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ): மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பின்படி தனிநபர் வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. 2002 ஆம் ஆண்டு வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் கணக்கெடுப்பு இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

2006 ஜனவரி 18]

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி நபர் வருமானமும் தமிழ்நாட்டினுடைய மக்கள் தொகையும் அதிலே வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுடைய கணக்கெடுப்பும் நடத்தப்படாமல் ஒரு நாடு முன்னேறுகிறது, ஒரு மாநிலம் முன்னேறுகிறது என்று சொல்வது எப்படிப் பொருத்தமாக இருக்க முடியும்? ஆகையால் அந்தக் கணக்கெடுப்பே இல்லாமல் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை எப்படி நிறைவேற்றப் போகிறோம்? அதற்குரிய முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2002 முதல் 2007 வரை வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் கணக்கெடுக்க உரிய வழிமுறைகள் மைய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் தனது 13–9–2002 தேதியிட்ட கடிதம், Q-16025/04/2002–ன்மூலம் அறிவித்தது. அதன்படி வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் கணக்கெடுப்பு பின்வரும் 13 அளவுகோல்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது:

பயன்பாட்டில் உள்ள நிலத்தின் அளவு, வீட்டின் தன்மை, சராசரியாக இருக்கும் உடுக்கும் உடை, உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம், வீட்டு உபயோகப் பொருட்களான தொலைக்காட்சி, வானொலி, மின்விசிறி முதலியன உள்ளதா, கல்வித் தகுதி, குடும்ப உழைப்பு நிலை, குடும்ப வருமானத்தின் தன்மை, குழந்தைகளின் நிலை, குடும்பத்தின் கடன் தன்மை, இடம் பெயர்ந்ததன் காரணம், அரசு உதவி தேவைப்படும் தன்மை. இக்கணக்கெடுப்பிற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் தனிநபர் வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால், தனிநபரின் சமூகப் பொருளாதார அடிப்படையில் மதிப்பெண்ணின் மூலம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் கண்டறியப்படுவர். இருப்பினும், தமிழ்நாடு பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையில் 2004 ஆம் ஆண்டு அறிக்கையின்படி தனி நபர் ஆண்டு வருமானம் ரூபாய் 13,423 ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனத்திற்கு 4 மதிப்பெண்கள் என வழங்கப்பட்டு கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது. 13 இனங்களில் அதனடிப்படையிலே பெற்ற மதிப்பெண்கள் வரிசைப்படுத்தப்பட்டு, மைய அரசின் ஊரக வளர்ச்சித் துறையின் கடிதத்தில் கூறப்பட்டுள்ள அளவுகோலின்படி, 16 மற்றும் அதற்குக் கீழாக மதிப்பெண்கள் பெற்றவர்கள் வறுமைக்

கோட்டிற்குக் கீழே உள்ளவர்களாகக் கருதப்படுவார்கள். மத்திய திட்டக் குழு அறிவித்துள்ள வறுமைக் கோட்டிற்கான குறியீட்டு விதிகளின்படி, தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கப்படவேண்டியவர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 26.77 இலட்சமாகும். அதனடிப்படையில், தமிழ்நாட்டில் 16 மற்றும் அதற்குக் கீழாக மதிப்பெண்கள் பெறப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 25.48 இலட்சமாகும். அவையே வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களாகத் தெரிவிக்க அரசுக்குக் கருத்துரு வரப்பெற்று, அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது. இதனிடையே உச்சநீதிமன்றத்தில் இப்பொருள் குறித்து பொது நல வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டது. அது நிலுவையில் உள்ளதால், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் பட்டியலை இறுதி செய்ய தடை உள்ளது. எனவே, தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் பட்டியலை இறுதி செய்ய முடியாத நிலை உள்ளது.

முற்பகல் 10–50

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விரிவான பதிலை அளித்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், ஒரு நாட்டினுடைய முன்னேற்றம், ஒரு முன்னோடி மாநிலம் என்று சொல்கிறபோது, எந்த அடிப்படையிலே அந்த மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம் என்பதை இன்னும் இந்த அரசு செயல்படுத்தவில்லை என்பதற்கான சான்றாகத்தான் அவருடைய அறிக்கை அமைந்திருக்கிறது. மேலும், இதை நிறைவேற்றிச் செயல்படுத்துவதற்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, உச்சநீதிமன்றத்திலே ஒரு பொது நல வழக்கு இருக்கிற காரணத்தினாலே இறுதி செய்யப்படவில்லை என்று சொல்கிறார்.

திரு. ஜி. பழனிசாமி: அது இந்தியா பூராவும் இருக்கிற வழக்கு. தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியாவிலே இருக்கிற சில மாநிலங்களுக்கும் சேர்த்துதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆமாம், அது இந்தியா முழுவதும் இருக்கிற வழக்குதான்.

திரு. ஜி. பழனிசாமி: அதனாலே, அது தமிழ்நாடு மாநிலத்திற்கு என்று மட்டுமல்ல.

2006 ஜனவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதனாலே அமைச்சரை நீங்கள் குற்றம் சொல்லக்கூடாது.*

திரு. ஜி. பழனிசாமி: இல்லை, நமக்கு இல்லை, நமக்கு இல்லை. தமிழ்நாட்டிற்குக் கிடையாது, பிற பல மாநிலங்களிலும் இருக்கிறது. அதைத்தான் நான் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 28, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

28—

சார்பதிவாளர் அலுவலகம்

*** 53774—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகம் புதிதாக கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஒட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகத்தின் அரசுக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. போதிய இடவசதி உள்ளது. எனவே, புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி என்னும் அரக்கனை அழித்து, வெள்ளம் என்ற சூறாவளியை விரட்டி, தமிழகத்தை எல்லாத் துறைகளிலும் உயர்த்திக் காட்டி புதிய சகாப்தம் படைத்த உலகத் தமிழர்களின் ஒளிவிளக்காய் ஜொலித்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் கழுகுமலை குடவறை கோயில் அழகுபடுத்தும் பணிக்காக, தமிழக சுற்றுலா வளர்ச்சிக்